**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 245** **நாள்: 27.06.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள்திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பெராகா சாலையில் (Beraka Road) தூய்மைப் பணி மேற்கொண்டிருந்த பொழுது தரையில் கண்டெடுத்த3 சவரன் தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர்கள் திருமதி கார்த்திகா மற்றும் திருமதி கலைச்செல்வி ஆகியோர்களின் நேர்மையினைப் பாராட்டி தூய்மைப் பணியாளர்கள் இருவருக்கும் சால்வை அணிவித்து கேடயம் வழங்கி கௌரவித்தார்.**

தூய்மைப் பணியாளர்கள் திருமதி கார்த்திகா மற்றும் திருமதி கலைச்செல்வி ஆகியோர் திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பெராகா சாலையில் (Beraka Road) 26.06.2026 அன்று காலையில் தூய்மைப் பணி மேற்கொண்டிருந்த தேவாலயம் அருகில், 3 சவரன் தங்கச் சங்கிலி தரையில் கிடந்ததை கண்டெடுத்து மேற்பார்வையாளர் உதவியுடன் அயனாவரம் ஜி5 காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் ரிப்பன் கட்டட அலுவலகத்தில் தூய்மைப் பணியாளர்களின் இந்த நேர்மையான செயலினைப் பாராட்டி, தூய்மைப் பணியாளர்கள் இருவருக்கும் சால்வை அணிவித்து கேடயம் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் ராம்கி நிறுவன்த்தின் செயல்பாட்டுத் துறை அலுவலர் டாக்டர் ரவி, திட்டத்தலைவர் திரு. பரிசுத்தம் வேதமுத்து மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**